சாதாரண நெல் குவிண்டாலுக்கு ரூ.105 - சன்னரக நெல் குவிண்டாலுக்கு ரூ.130

# குறைந்தபட்ச ஆதார விலையுடன் கூடுதல் ஊக்கத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜுன் 28-**

**தமிழ்நாட்டு விவசாயிகளின் நலன் கருதி 2024-25 ஆம் ஆண்டு நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையுடன் காரீப் கொள்முதல் பருவத்திற்கு சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.105/ம், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.130/ம் கூடுதல் ஊக்கத் தொகையாக தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட உத்தரவில் தெரிவித்துள்ளார்.**

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் காரீப் 2024-25 நெல் கொள்முதல் பருவது த்திற்கு ஆதார விலையுடன் ஊக்கத்தொகையும் சேர்த்து விவசாயி களுக்கு வழங்குவது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (26.06.2024) ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கடந்த 2023-2024 காரீப் கொள்முதல் பருவத்தில் 25.06.2024 வரையில் 3,175 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 3,72,310 விவசாயிகளிடமிருந்து 29,91,954 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ரூ.6,442.80 கோடி விற்பனை தொகையாக வழங்கப்பட்டது ஆகிய விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் அதே அடிப்படையில், இந்த ஆண்டும் காரீப் கொள்முதல் 2024-2025 பருவத்தில் தேவையான அளவு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து ஒன்றிய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு முடி வெடுத்துள்ளது.

இந்த ஆண்டு 12.06.2024 அன்று மேட்டூர் அணை திறக்கப்பட இயலாத சூழ்நிலையில், டெல்டா மாவட்ட விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.78.67 கோடி மதிப்பீட்டில் குறுவைத் தொகுப்புதிட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திட உத்தரவிட்டார். இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் விவசாயிகளின் நலன் கருதி காரீப் 2024-2025 பருவத்திற்கான நெல் கொள்முதலினை 01.09.2024 முதல் மேற்கொள்ள ஒன்றிய அரசை, இவ்வரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் காரீப் 2024-2025 பருவத்திற்கான நெல் கொள்முதலினை 01.09.2024 முதல் மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.

ஒன்றிய அரசு அண்மையில் காரீப் 20242025 பருவத்திற்கு குறைந்தபட்ச ஆதாரவிலை யாக சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,300/என்றும், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,320/ என்றும் நிர்ணயித்துள்ளது. இந்நிலையில் தமிழ்நாட்டில் நெல் உற்பத்தியினைப் பெருக்கும் வகையிலும், விவசாயிகளின் வாழ்வை வளப்படுத்தி அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் நோக்கத் தோடு, 2024-2025 காரீப் கொள்முதல் பரு வத்திற்கு (Kharif Marketing Season) சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.105/ம், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.130/ம் கூடுதல் ஊக்கத் தொகையாக தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து வழங்கிடவும், அதன்படி விவசாயிகளிடமிருந்து சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,405/என்றும், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,450/ என்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்திட முதலமைச்சர் அவர்கள் உத்தவிட்டுள்ளார்.

இந்த புதிய குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் மாநில அரசின் ஊக்கத் தொகை 01.09.2024 முதல் நடைமுறைக்கு வரும். அத்துடன், தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, அடுத்துவரும் 2025-26 நிதியாண்டில், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,500/ என்ற வீதத்தில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு வழங்கிடவும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (26.6.2024) தலைமைச் செயலகத்தில், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் காரீப் 2024–25 நெல் கொள்முதல் பருவத்திற்கு ஆதார விலையுடன் ஊக்கத்தொகையும் சேர்த்து விவசாயிகளுக்கு வழங்குவது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நெடுஞ்சாலைத்துறை டெண்டர் முறைகேடு வழக்கில்

# எடப்பாடி பழனிசாமி தப்பிக்கவே முடியாது!

## நிச்சயம் வழக்குத் தொடருவேன்! கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

**சென்னை, ஜுன் 28-**

**நெடுஞ்சாலைத் துறை டெண்டர் முறைகேடு வழக்கில் எடப்பாடி பழனிசாமி தப்பிக்க முடியாது. விக்கிரவாண்டி தேர்தல் முடிந்த பின்பு நிச்சயம் வழக்கு தொடர்வேன் என்று தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கூறியுள்ளார்.**



சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. அமைப்புச் செய லாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களை நேற்று முன்தினம் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது :-

எடப்பாடிபழனிசாமி உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டு வருகிறார். தனிப்பட்ட முறையில் என்னையும் விமர்சித்துப் பேசி உள்ளார். உண்மையை விளக்க வேண்டியது தி.மு.க.வின் கடமை. எந்த கேள்விக்கணை எழுப்பப்பட்டாலும், அதற்கு அவ்வப்போது பதில் சொல்லிப் பழக்கப்பட்டவர்கள் நாங்கள். நேற்றைய தினம் அவர், தான் ஏதோ உத்தம புத்திரன் போல பேட்டி அளித்து இருக்கிறார். நெடுஞ்சாலை துறை டெண்டர் முறைகேடு வழக்கில் தன்னை நீதிமன்றம் நிரபராதி என விடுதலை செய்தது போல பேசி இருக்கிறார். உண்மையை மறைக்காமல் அவர் பேட்டி அளித்திருக்க வேண்டும்.

உண்மை நிலவரம் என்னவென்றால், அவர் ஆட்சியில் இருந்த காலத்தில் அவருடைய சம்பந்திக்கும் மற்றவர்களுக்கும் முறைகேடாக நெடுஞ் சாலை துறையில் டெண்டர் அளித்ததில் பல்லாயிரம் கோடி ரூபாய் முறைகேடு நடைபெற்றது எனவும், விசாரிக்க வேண்டும் எனவும் லஞ்ச ஒழிப்பு துறை யில் நான் புகார் அளித்தேன்.

**எடப்பாடி பச்சைப் பொய்!**

அவர்கள் விசாரிக்காத காரணத்தினால், உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தேன். அதில் புகார் கொடுத்தும் விசாரிக்கவில்லை என சொன்னவுடன், நீதிமன்றத்தில் அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டனர். இதில் சிபிஐ., விசாரணை கேட்கவில்லை. இந்த வழக்கில் நீதிமன்றத்தில் கேட்டதெல்லாம், லஞ்ச ஒழிப்பு துறை விசாாரிக்காத தால், தமிழ்நாடு அரசுக்கு உட்பட்ட special investicating team மூலம் விசாரிக்க வேண்டும் என கோரிக்கை வைத்தோம்.

அப்போதைய அரசு தரப்பில் பதில் மனு போட்டார்கள். இரு தரப்பு வாதங்களை கேட்ட நீதிமன்றம், இந்த வழக்கு முறையாக விசாரிக்கப் படவில்லை. பல்வேறு சிக்கல்கள் இருப்பதால், சிபிஐ., விசாரணையை நீதிமன்றமே தான் பிறப்பித்தது. ஆகையால் இந்த வழக்கில் அன்றும் சிபிஐ கேட்கவில்லை. இன்றும் கேட்கவில்லை. ஏனெனில் சிபிஐ., விசாரணை என்றால் என்னவென்று எங்களுக்கு தெரியும். நான் வழக்கை வாபஸ் பெற்றேன் என எடப்பாடி பழனிசாமி பச்சை பொய் பேசுகிறார்.

சென்னை உயர்நீதிமன்றம் சிபிஐ., விசாரணையை 11.09.2017 முதல் துவக்க உத்தரவிடுகிறது. இதையடுத்து, 29.10.2018 அன்று எடப்பாடி பழனிசாமி இதில் உச்சநீதிமன்றத்தில் இடைக்கால தடை பெறுகிறார். இது தொடர்பாக பத்திரிக்கைகளில் செய்தி வெளியாகி இருக்கிறது. ஆனால் இன்று பச்சை பொய் பேசுகிறார் எடப்பாடி பழனிசாமி.

பின்பு 2022ல் இந்த விவகாரத் தில் இறுதி விசாரணை வருகிறது. அதற்குள் ஆட்சி மாற்றம் ஏற்படுகிறது. ஏற்கனவே விசாரணை சரியில்லை என்பதால், மாநில காவல்துறை சார்பாக விசாரணை துவங்கி நடைபெற்றது. இதன் காரணமாக ஒரே வழக்குக்கு இரண்டு விசாரணை வேண்டாம் என்ற அடிப்படையில் நான் அளித்த மனுவை திரும்ப பெற்றேன். இதற்காக டான்சி வழக்கின் போக்கை உதாரணமாக விளக்கிய ஆர்எஸ்பாரதி, இதையெல்லாம் எடப்பாடி பழனிசாமி கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

**டான்சி வழக்கு!**

டான்சி வழக்கை போல், இந்த வழக்கிலும் நடைபெற்றதை எடப்பாடி பழனிசாமி தெரிந்து கொள்ள வேண்டும். இந்த வழக்கில் நான் மனுவை திரும்ப பெற்ற போதிலும் கீழ் நீதிமன்றம் விசாரிக்கட்டும். முடிவு செய்யட்டும் என உச்சநீதிமன்றம் தரப்பில் முடித்து வைத்தார்கள்.

அதன்படி சென்னை உயர்நீதிமன்றம் விசாரணையில் இருதரப்பு வாதங்களை கேட்ட பின்பு, காவல் துறை விசாரணை முறையாக நடைபெற்றது என அவரை விடுவித்தது. இருப்பினும் அதில் மற்றொரு உத்தரவையும் நீதிபதி பிறப்பித்தார். அதாவது இந்த வழக்கை தனிப்பட்ட முறையில் ஆர்.எஸ்.பாரதி நடத்தலாம் என்பது அது. நாங்களும் நடத்தலாம் என்று இருந்தோம். அதற்குள் நாடாளுமன்ற தேர்தல் வந்துவிட்டது. எப்படி ஜெயலலிதா, டான்சி வழக்கில் மாற்றிப் பேசி மாட்டிக் கொண்டாரோ அதுபோல இன்று எடப்பாடி பழனிசாமி பேசி இருக்கிறார்.

மீண்டும் வழக்கு தொடரப்படும்!

வழக்கு தொடர காலம் இருப்பதால், விக்கிரவாண்டி தேர்தல் முடிந்தவுடன், வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோவின் ஆலோசனை பெற்று, திமுக தலைவரின் அனுமதி பெற்று, இந்த வழக்கை நான் மீண்டும் தொடர இருக்கிறேன். எடப்பாடி பழனிசாமி சவால் விடலாம். ஆனால் சட்டத்துக்கு முன் அவர் தப்பிக்க முடியாது.

இந்த விவகாரத்தில் முதலமைச்சருக்கு எதுவும் தெரியவில்லை என்ற பாணியில் எடப்பாடி பழனிசாமி விமர்சிப்பது கண்டனத்துக்கு உரியது. ஆதாரத்துடன் அவர் பேச வேண்டும். பொய் பேசக் கூடாது. எனக்கு வயதானது பற்றி எடப்பாடி பழனிசாமி கவலைப்படுகிறார். உடல்மொழியில் விமர்சிக்கிறார். என்னாலும் அதற்கு பதில் அளிக்க முடியும். எனது வயதுக்கு அது சரியாக இருக்காது. அவர் வேண்டுமென்றால் சின்ன பையன் என சின்னப்பிள்ளைத்தனமாக நடந்து கொள்ளலாம். சட்டப்பேரவையில் முதலமைச்சர் விவாதிக்க சவால் விடுகிறார். ஆனால் எடப்பாடி பழனிசாமி ஓடி ஒளிகிறார். மக்கள் முன் எடப்பாடி பழனிசாமி நாடகமாடுகிறார்.

சாதிவாரி கணக்கெடுப்பு மத்திய அரசு எடுக்க வேண்டும் என்பது தொடர்பாக. முதலமைச்சர் சிறப்பு தீர்மானத்தை பேரவையில் கொண்டு வந்தார். இதனை அனைவரும் வரவேற்று இருக்க வேண்டும். ஆனால் அன்புமணி ராமதாஸ் இதனை எதிர்க்கிறார், விக்கிரவாண்டி தேர்தலை மனதில் வைத்து கொண்டு சிலர் இப்படி பேசுகிறார்கள். ஆகையால் பொய் பிரச்சாரம் எடுபடாது என எடப்பாடி பழனிசாமி மற்றும் அன்புமணி ராமதாஸ் ஆகியோருக்கு சொல்லிக் கொள்கிறேன்.

**நிலுவையில் சி.பி.ஐ. வழக்குகள்!**

குறிப்பாக, 2016ல், 570 கோடி ரூபாய் கண்டெய்னர் லாரியில் பிடிப்பட்ட பணம் தொடர்பாக, 8 ஆண்டுகள் ஆகியும் சிபிஐ., விசாரணையில் எந்த முன்னேற்றமும் இல்லை. அது யாருடைய பணம் என இதுவரை சிபிஐ சொல்லவில்லை. எப்ஐஆர் கூட போடவில்லை. இப்படி பல சிபிஐ., வழக்குகள் தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ளன. ஆகையால் தான் கள்ளக்குறிச்சி சாராய நிகழ்வு தொடர்பாக சிபிசிஐடி விசாரணைக்கு முதலமைச்சர் உத்தரவிட்டார். விசாரணை ஆணையமும் அமைத்துள்ளார்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்தார்.

பொதுவாழ்வில் அயராது பாடுபட்ட

# அப்பழுக்கற்ற தலைவர் இளையபெருமாள்!

## நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

*சென்னை, ஜுன் 28-*

*“பொதுவாழ்வில் அயராது பாடுபட்ட அப்பழுக்கற்ற தலைவர் இளையபெருமாள் அவர்கள்” என்று அவரது நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி., எஸ்.டி., பிரிவு மாநில தலைவர் எம்.பி. ரஞ்சன்குமாருக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.*

*இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:-*

*ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து காங்கிரஸ் பேரியக்கத்தின் நாடறிந்த தலைவராக உயர்ந்த பெரியவர் எல்.இளையபெருமாள் அவர்களின் அரசியல் வாழ்க்கை என்பது, காலத்தாலும், களத்தாலும் வரலாற்றில் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றதாகும்.*

*கடலூர் மாவட்டம், காட்டு மன்னார்கோவிலில் 1924ஆம் ஆண்டு பிறந்த இளையபெருமாள் அவர்கள், சமூக சேவகரும், துறவியுமான சகஜானந்தாவைப் பின்பற்றி எளிய மக்களுக்குத் தொண்டாற்றும் நோக்கத்துடன் பொதுவாழ்க்கைக்கு வந்தவர்.*

*ஒன்றுபட்ட தென்னார்க்காடு மாவட்டம் - தஞ்சை மாவட்டத்தில் 1940 முதல் 1970 வரையில் நடந்த மிகப் பெரிய சமூகப் போராட்டங்களை நடத்தியவர் பெரியவர் இளைய பெருமாள் அவர்கள்.*

*நாடு விடுதலை பெறும் முன்னர், இளம்பருவத்தில் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றிய இளையபெருமாள் அவர்கள் அப்பணியில் இருந்து ஊர் திரும்பியபோது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகப் போராடி ஆறு மாதம் சிறைவாசமும் அனுபவித்துள்ளார்.*

*நாட்டின் விடுதலையுடன், தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்காகவும் தொடர்ந்து போராடியுள்ளார். விடுதலைக்குப் பின்னரும்கூட, தேசிய இயக்கமான காங்கிரசில் இணைந்து அரசியல் பணியில் ஈடுபட்டு தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கு குரல் கொடுத்தவர்.*

*தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தவர். சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியின் உறுப்பினராக 1952 முதல் 1967 வரை மூன்று முறை தேர்வு செய்யப்பட்ட பெருமைக்குரியவர். சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். நேரு அவர்கள் பிரதமராக இருந்தபோது அமைக்கப்பட்ட அகில இந்திய தீண்டாமை ஒழிப்பு ஆணையத்தின் முதல் தலைவராகவும் பணியாற்றியவர் என்பதெல்லாம், இளையபெருமாள் அவர்களின் அரசியல் அடையாளங்கள்.*

*அவர் தலைமையிலான அகில இந்தியத் தீண்டாமை ஆணையத்தின் பரிந்துரையின் பலனாகவே, தீண்டாமைக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் உருவானது என்பதே அவரது அரசியல் இலட்சியத்தின் உன்னதத்திற்கும், விழுமியத்திற்கும் வெளிப்படையான வரலாற்றுச் சான்று.*

*பெரியவர் இளையபெருமாள் அவர்கள், 1980ல் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமையும் போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தார். முத்தமிழறிஞர் கலைஞருடன் மிகுந்த நெருக்கமும் நட்புறவும் கொண்டிருந்தவர். 1998ஆம் ஆண்டு அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பெயரிலான தமிழ்நாடு அரசின் விருதை முதன்முதலாக பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்குத்தான் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள். “சலிப்பேறாத சமூகத் தொண்டர்” என்று முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்களாய் பாராட்டப்பட்டவர்.*

*அதுமட்டுமின்றி, பெருந்தலைவர் காமராஜர், கக்கன் போன்ற காங்கிரஸ் தலைவர்களுடன் நெருக்கமாக இருந்தவர் என்பதுடன், தேசிய அளவில் முன்னாள் பிரதமர்கள் நேரு முதல் இந்திரா காந்தி அம்மையார் வரையும் இணைந்து பணியாற்றிய பெருமைக்குரியவரும் ஆவார். இளம்பருவத்து நாடாளுமன்ற உறுப்பினராக அண்ணல் அம்பேத்கரைச் சந்தித்து, அவரது பாராட்டையும் பெற்ற வர். இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க தலைவரான பெரியவர் இளையபெருமாள் அவர்களைச் சிறப்பிக்கும் வகையில், கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் நூற்றாண்டு நினைவரங்கம் ஒன்று அமைக்கப்படும் என்று கடந்த 18.04.2023 அன்று சட்டப்பேரவையில் அறிவித்துள்ளேன் என்பதையும் இங்கு பெருமையுடன் நினைவுகூர விரும்புகிறேன்.*

*பெரியவர் இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடுவதுடன், “இளையபெருமாள் வாழ்க்கைச் சரித்திரம்” என்ற அவரது வாழ்க்கை வாவாற்று நூலையும் வெளியிடுவது பெரிதும் பாராட்டுதலுக்குரிய நிகழ்வாகும்.*

*பொதுவாழ்வில் பாடுபட்ட அப்பழுக்கற்ற தலைவர் இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டு விழா சிறக்க எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க பெரிய வர் இளைய பெருமாள் புகழ்!*

*இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.*

பூசாரிகள் குடும்பத்தில் ஒருவருக்கு கல்வி உதவித் தொகை! ஒரு கால பூஜை திருக் கோயில்களுக்கு வைப்பு நிதி ரூ.2.50 லட்சம்!

# ரூ.10,000 அறிவித்த முதல்வருக்கு பூசாரிகள் நலச் சங்கம் நன்றி - பாராட்டு!

## சங்க மாநிலத் தலைவர் பி.வாசு அறிக்கை!

*சென்னை, ஜுன் 28 -*

*ஒரு கால பூஜை நடைபெறும்திருக்கோவில்களில் பணியாற்றும் பூசாரிகளின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு அவர்களுடைய குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு கல்வி உதவித் தொகை ரூ 10,000 வீதம் மொத்தம் 500 பேருக்கு வழங்கப்படும் என்று அறிவிப்பு வரவேற்கத்தக்கது என்று சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட பூசாரிகள் நலச் சங்கம் பாராட்டு தெரிவித்துள்ளது.*

*இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு சென்னையில் அவரது இல்லத்தில் பூசாரிகள் நலச் சங்கத்தின் மாநிலத் தலைவரும் பூசாரிகள் ஓய்வூதிய தேர்வுக் குழு உறுப்பினருமான பி.வாசு பூசாரி வியாழக்கிழமை அன்று (27.6.2024) நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார்.*

*பின்னர் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முரளிதரன் நுங்கம்பாக்கத்திலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார். உடன் பூசாரிகள் நலச் சங்க பொருளாளர் கே.சுந்தரம், பூசாரியின் குரல் ஆசிரியர் த.புருஷோத்தமன் உடன் இருந்தனர்.*

*பின்னர் இது தொடர்பாக பி.வாசு பூசாரி கூறியதாவது:*

*ஏழ்மை நிலையில் தங்களுடைய புதல்வர்களுக்கு கல்விக் கட்டணத்தைக் கூட செலுத்த முடியாத நிலையில் பூசாரிகள் வறிய நிலையில் இருந்து வருகின்றனர். எனவே கல்வி உதவித்தொகை ரூ.10,000 வழங்கப்படும் என்ற அரசு அறிவிப்பு பூசாரிகளின் குடும்பத்தில் கல்வி ஒளியேற்ற பெரும் உதவியாக இருக்கும் என்பது உறுதி. கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்துவதில் முதலிடம் பெறுவது திராவிடப் பேரரசுதான் என்பதில் சற்றும் ஐயம் இல்லை.*

*பூசாரிகள்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு கல்வி உதவித்தொகை ரூ.10000 வழங்க ஏற்பாடு செய்துள்ள தமிழக முதல்வர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களுக்கும், தமிழக பூசாரிகளின் குடும்ப த்தினர் மிகுந்த நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்கின்றனர்.*

**பூசாரிகள் நலச்சங்கம் வரவேற்பு**

*இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கால பூஜை கூட நடத்த முடியாமல் உள்ள 17,000 திருக்கோவில்களுக்கு ஒரு லட்சமாக இருந்த வங்கி வைப்புத் தொகை பின்னர் ரூ. 2 லட்சமாக உயர்த்தப்பட்டது. தற்போது ரூ.2.50 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது என்று பூசாரிகள் நலச் சங்கத்தின் மாநிலத் தலைவரும் பூசாரிகள் ஓய்வூதிய தேர்வுக் உறுப்பினருமான பி. வாசு பூசாரி தெரிவித்துள்ளார்.*

*இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு அவர்களை 27.6.2024 வியாழக்கிழமை அன்று நேரில் சந்தித்து இது தொடர்பாக அவர் நன்றி தெரிவித்தார்.*

*பின்னர் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முரளிதரன் அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனு சமர்ப்பித்தார். பூசாரிகள் நலச்சங்க மாநில பொருளாளர் கே.சுந்தரம், பூசாரியின் குரல் ஆசிரியர் த. புருஷோத்தமன் உடன் இருந்தனர்.*

*ஒரு கால பூஜை நடைபெறும் துறை கட்டுப்பாட்டில் உள்ள 17,000 திருக்கோவில்களுக்கு வங்கி வைப்புத் தொகை ரூ.2.50 லட்சமாக உயர்த்தப்பட்டது வரவேற்கத்தக்கது. இந்த வங்கி வைப்புத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் பூஜைப் பொருள்களை தாராளமாக வாங்கி பூசாரிகள் பூஜை செய்வதற்கு வழிவகை ஏற்பட்டுள்ளது.*

*ஒரு கால பூஜை நடைபெறாமல் உள்ள மேலும் ஆயிரம் திருக்கோவில்கள் தேர்வு செய்யப்பட்டு அந்த திருக்கோவில்களின் பெயரில் வங்கிக் கணக்கில் ரூ.2.50 லட்சம் வைப்பு நிதியாகவும் வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.*

*மேற்கண்ட திருக்கோவில்களில் மாத ஊதியமே இல்லாமல் பணியாற்றி வந்த பூசாரிகளுக்கு மாத ஊக்கத்தொகை ரூ.1000 அரசு நிதியிலிருந்து வழங்க வெளியிட்டுள்ள அறிவிப்புக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

*எதிர்வரும் விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் மகத்தான வெற்றி பெற இத்தொகுதியில் உள்ள பூசாரிகள் பணியாற்றுவார்கள். கடந்த மக்களவைத் தேர்தலில் 40 க்கு 40 வெற்றிக்கனியைப் பறித்த தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல் வெற்றியையும் சமர்ப்பிக்க பூசாரிகள் உறுதி பூண்டு ள்ளனர். இத்தொகுதியில் உள்ள பூசாரிகள் அனைவரும் ஏகோபித்த அளவில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு மகத்தான ஆதரவளிப்பார்கள்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*